
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## இதழின் உள்ளே....


- ☆ ஆசிரியருரை
- ☆ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
- ☆ பெண்களுக்கான பகுதி
- ☆ சிறுவர்களுக்கான பகுதி
- ☆ வேத அறிவுப் போட்டி
- ☆ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
- ☆ நாளும் நடப்பும்


ஆசிரியர்
B.அர்ஜூனன்

மரம் 7 2007 மே கனி 6




# தேவ அன்பு
## The Love of God

மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பைப் பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தில் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவனுடைய இருதயத்திற்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கரை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.

*-Betty Burton Choate*




"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15
"The Churches Of Christ salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 7 மே – 2007 கனி – 6


ஆசிரியருரை

# கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஏழுவிதமான ஆசீர்வாதங்கள்

## Seven Blessings For Those Who in Christ



ஆசீர்வாதத்தைத்தேடி அலைந்தோடும் இந்நாட்களில் ஆசீர்வாதம் எங்கே இருக்கிறது, அதைப்பெறுவதற்கான வழிகள் என்ன என்பதைக்குறித்து தியானிப்போம். ஆசீர்வாதங்கள் அனைத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் வைத்திருக்கிறார். அவைகளில் ஏழு விதமான ஆசீர்வாதங்களை இங்கே காண்போம்.

**முதலாவது ஆசீர்வாதம்:** ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது புதுசிருஷ்டியாக மாற்றப்படுகிறான். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17). கிறிஸ்துவுக்குள் என்றால் அவருக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் என்று அர்த்தம். நாம் அவருக்குள் இருக்க என்ன செய்யவேண்டும்? கிறிஸ்துவினுடைய உபதேசத்தை ஏற்று, விசுவாசித்து, அதற்கு கீழ்ப்படிந்து, கர்த்தராகிய இயேசுவை வாயினாலே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று கொள்ளவேண்டும். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டுவருகிறார். இவர்கள் கர்த்தரால் தம்முடைய வசனத்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். இவர்களே புதுசிருஷ்டி என வேதாகமம் போதிக்கிறது. புதியதிற்கும் பழையதிற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அறிவோம். புதியது ஒன்று வந்தவுடன் பழையதை விரும்பமாட்டோம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும்போது இந்தவிதமான ஆசீர்வாதத்திற்கு தகுதியுள்ளவனாக மாறுகிறான். பிலிப்பு, மந்திரி சம்பவத்தில் மந்திரி பிலிப்புவினால் கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் அவனுடைய சந்தோஷத்தை ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். "மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியேபோனான்" என்று அப்.8:39–ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவுக்குள் மெய்யாக ஒப்புக்கொடுக்கிறவர்களுக்கு இவ்விதமான சந்தோஷமே ஏற்படுகிறது. அவர்கள் மெய்யான ஆவிக்குரிய பிறப்பை பெற்றுக்கொள்கிறார்கள்.

**இரண்டாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த நாமம் சாதாரண

ஒன்றல்ல. ஆதியிலே "அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச்சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப்.11:26). இந்த சீஷர்கள் ஒரு வருஷகாலமாக சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு தாங்கள் பெற்றுக்கொண்ட ஆன்மீக இரட்சிப்பை எடுத்துச் சொன்னார்கள். இவர்கள் கிறிஸ்துவினுடைய உபதேசத்தில் நிலைத்திருந்தபடியால் இந்த சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இவர்கள் உறுதியாய் நிலைத்திருந்தவர்கள், கிறிஸ்துவினுடைய சிந்தையை பெற்றவர்கள், கிறிஸ்துவின் சரீரமாக இருந்து செயல்பட்டவர்கள் மொத்தத்தில் கிறிஸ்துவை பிரதிபலிப்பவர் களாயிருந்து செயல்பட்டவர்கள். எல்லாருக்கும் இந்த நாமம் கொடுக்கப்பட வில்லை. சபையோடே கூடியிருந்த அந்த சீஷர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. ஒருவர் தன்நாட்டைப்பற்றியும், தன் குலத்தைப்பற்றியும் பெருமையாக பேசுவார். ஆனால் அதற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு விஷயம் என்னவென்றால் இந்த அழியாத நாமத்தை பெற்றுக்கொள்வதுதான்.

**மூன்றாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது உங்களுடைய நாமங்கள் பரலோகத்திலே ஜீவபுத்தகத்தில் எழுதப்படுகிறது. ஆண்டவர் தம்முடைய சீஷர்களைப்பார்த்து: "ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்.10:20). பரலோகத்திலே பேர் எழுதப்பட வேண்டுமானால் அது சாதாரண காரியம் அல்ல. பூமியிலே நல்ல பள்ளிகளில் அட்மிஷன் வாங்கிவிடலாம். அல்லது ரயிலில் நல்ல இருக்கைகளை ரிசர்வ் செய்து விடலாம் ஆனால் பரலோகத்தில் உங்களுடைய பெயர் எழுதப்படவேண்டுமானால். நீங்கள் தேவனால் முன்குறிக்கப்பட்டவராகவும், கர்த்தருக்காக வாழ்கின்ற ஒரு மகனாக, மகளாக இப்பூமியிலே சாட்சியுள்ளவர்களாக வாழும்போது உங்களுடைய நாமங்கள் பரலோகத்திலே உள்ள ஜீவபுத்தகத்தில் எழுதப்படும். மேலும் எபிரெய ஆசிரியர் குறிப்பிடும்போது; "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதி யிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும், நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" என்கிறார் (எபி.12:22-24). இப்படிப்பட்ட ஆசீர்வாதம் கிறிஸ்துவினிடத்திற்கு வந்தவர்களுக்கு மட்டுமே உண்டு. இந்த ஆசீர்வாதத்தை பெற்று இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் இதைப் பெற்றுக்கொள்ள இன்றே உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அவர் ஒருவரையும் புறம்பே தள்ளுவதில்லை.

**நான்காவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லலாம். இந்த உறுதியை அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின புத்தகத்தில் 1:21-ல் குறிப்பிடுகிறார். மனிதனுக்கு இரண்டுவிதமான சம்பவங்கள் பூமியில் நடைபெறுகிறது. ஒன்று பிறப்பு மற்றொன்று இறப்பு. பிறக்கும்போது பாவமில்லாமல் பிறந்து, மரிக்கும்போது பாவியாக மரிக்கின்றனர். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக இருந்து மரிப்பானேயானால் அவன்

பாவமில்லாமல் மரிக்கின்றான். அதைத்தான் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லுகிறார். மரணத்திற்கு பின் தேவனோடு நித்திய நித்தியமாக வாழப்போகிறோம் என்ற சந்தோஷத்தில் சாவு எனக்கு ஆதாயம் என்று பவுல் சொல்லுகிறார். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை எழுதிய யோவான் "பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று" (வெளி.14:13) என்கிறார். எத்தனை அருமையான ஆசீர்வாதம் என்று பாருங்கள். இது கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்களுக்கு மட்டுமே இருக்கிறதான ஆசீர்வாதம். இதைப்பெற்றுக்கொள்ள கர்த்தருக்குள்ளாக வாழவேண்டும். பெயர் கிறிஸ்தவர்களாக இருந்து மரிப்பதால் பயனில்லை. அவர்களுடைய கிரியைகள் அவர்களோடு செல்லும். அவர்களுடைய கிரியைகளே அவர்களுக்கு விரோதமாக சாட்சியிடும். இதில் போக்குச்சொல்ல இடமில்லை. நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். ஒருவரும் தப்பமுடியாது. நீங்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்?

**ஐந்தாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது நிலையான ஸ்தலத்தை பெறுவோம். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார். நமக்காக ஜீவனையே சிலுவையில் ஒப்புக்கொடுத்தவர், நமக்காக பரிந்துபேசுகிறவர், நமக்காக நித்திய மீட்பை உண்டுபண்ணினவர் இயேசுகிறிஸ்து ஒருவரே. அவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து சொல்லுகிறார்; "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்றார் (யோவா.14:3). எவ்வளவு அருமையான வாக்குத்தத்த வார்த்தை என்பதைப்பாருங்கள். கண்ணீரோடு இருக்கிற சிறுவர்களைப் பார்த்து அழாதே நான் உனக்கு நலமானதைச் செய்கிறேன் என்றால் அச்சிறுவர்கள் அதைநினைத்து எவ்வளவு ஆனந்தம் கொள்ளுவார்கள். அதைப்போல ஆண்டவர் இவ்வுலகத்திலே மிகவும் வேதனையோடு போராடிக்கொண்டு இருக்கும் தம்முடைய சீஷர்களை பார்த்து உங்களுக்காக ஒரு ஸ்தலம் உண்டு என்னோடு அங்கிருப்பீர்கள் என்றால் அது எத்தனை அருமையான ஆசீர்வாதம்! இந்தவிதமான நம்பிக்கை வேறு எங்காவது உண்டா? அன்பானவர்களே, கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நலமானவைகளைக் கொடுக்க அறிந்திருக்கிறார். அவரைப்பற்றிக்கொள்ளுகிற அனைவரும் பாக்கியவான்கள். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா.10:9). பூமியிலே நூறத்தனையான ஆசீர்வாதங்களைப் பெற்று மறுமையிலே நித்திய வாழ்வையும் பெற்றுக்கொள்ளக்கூடிய பாக்கியம் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவர்களுக்கு மட்டுமே உண்டு. அதைப்பெற்றுக் கொள்ள ஆயத்தப்படுங்கள்.

**ஆறாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது அவர் நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனங்களை அறிவார். ஆகையால் "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி.7:25). ஒருவன்

இரட்சிக்கப்படவேண்டுமானால் அவன் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும். ஏனென்றால் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). மனிதன் இரட்சிப்புக்காக கடல்கடந்து செல்லுகிறான், ஏறாத மலைகளிலெல்லாம் ஏறுகிறான். தேவனால் தெரிந்தெடுத்த இயேசுவையும் அவரையும் அவருக்குள் இருக்கும் இரட்சிப்பையும் அறியாமல் போய்விடுகிறான். பிதாவாகிய தேவன் மனுஷகுமாரனாகிய இயேசுவை முன்குறித்திருக்கிறார். இவரைக்கொண்டு உலகங்களை உண்டாக்கினார். இவர் மூலமாக உலகத்தின் பாவத்தைப்போக்கும்படியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்து தமது வல்லமையுள்ள கரத்தினால் அவரை உயிரோடு எழுப்பினார். ஆகையால் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இயேசுவானவர் அவருக்குள் இருப்பவர்களை இரட்சிக்கவும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக எப்பொழுதும் வேண்டுதல் செய்கிறவராயிருக்கிறபடியால் அவர்களை எந்த சூழ்நிலையிலும் இரட்சிக்க அதாவது காப்பாற்ற அறிந்திருக்கிறார். ஆகையால் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவனுக்கு அவனுடைய வாழ்வைக்குறித்த பயம் என்பது இல்லை. கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற அசையாத நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று சொல்லுகிறார். இந்த நம்பிக்கையை பெற்றுக்கொள்ள கர்த்தருக்குள் வாருங்கள்.

**ஏழாவது ஆசீர்வாதம்:** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும்போது அவர் உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. நான் பூரணமாயிருக்கிறேன் என்று சொல்லத்தக்கவன் இல்லை. ஏனென்றால் எல்லாம் அநுபவித்த சாலொமோன் ராஜா தனது பிரசங்கி புத்தகத்தில் இவ்விதமாக சொல்லுகிறான். "இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையையும் காண்பதில்லை; எல்லாரும் ஒரே இடத்துக்குப் போகிறார்கள் அல்லவா? (பிர.6:6,7). ஆக மனிதன் குறையோடு எல்லாவற்றையும் விட்டு மண்ணுக்கு திரும்புகிறான். படித்தவன், பாமரன், ஏழை, பணக்காரன், வியாதியுள்ளவன், வியாதியற்றவன், கடன்காரன், கடனில்லாதவன் என்ற வித்தியாசமில்லை எல்லாரும் ஒரே இடமாகிய மண்ணுக்குத்திரும்புகிறார்கள். ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு திரும்புகிறது. அவன் கிறிஸ்துவுக்குள் வாழ்வானேயானால் அவனுடைய குறைபாடுகள் மகிமையிலே பார்த்துக்கொள்ளப்படும். இதைத்தான் பவுல் "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி.4:19) என்றார். அங்கே இருக்கிறவன், இல்லாதவன் என்ற வித்தியாசமில்லை. ஏனென்றால் "நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டி யானவரே அதற்கு விளக்கு" (வெளி.21:23). ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்தபோது தேவன் அதை பார்த்து தடுத்து நிறுத்தினார். பின்பதாக ஆபிரகாம் ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டு பிடித்து அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான். ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது. எனக்கு அன்பானவர்களே உங்களுடைய காரியங்களை கர்த்தருடைய பர்வதத்திலே, அதாவது மகிமையிலே தேவன்

பார்த்துக்கொள்வார். உங்களுக்காக வாடாஜீவகிரீடத்தை வைத்து வைத்திருக்கிறார் அவர் அந்நாளிலே அதை உங்களுக்குத் தருவார்.

இந்த விதமான ஏழு ஆசீர்வாதங்களை ஏழு சபைகளுக்கு ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். **1. எபேசு சபைக்கு எழுதும்போது;** "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது என்கிறார்" (வெளி.2:7). **2. சிமிர்னா சபைக்கு எழுதும்போது;** "நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில்போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்கிறார்" (வெளி.2:10). **3. பெர்கமு சபைக்கு எழுதும்போது;** "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது என்கிறார்" (வெளி.2:17). **4. தியத்தீரா சபைக்கு எழுதும்போது;** "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் என்கிறார்" (வெளி.2:26–28). **5. சர்தை சபைக்கு எழுதும்போது;** "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் என்கிறார்" (வெளி.3:5). **6. பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது;** "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந் திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் என்கிறார்" (வெளி.3:12). **7. லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது;** "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன் என்கிறார்" (வெளி.3:21).

இந்த ஏழு சபைகளுக்கும் ஆவியானவர் மூலம் கர்த்தர் சொல்லும்போது; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ என்ற வார்த்தையை படிக்கிறோம். கிறிஸ்துவுக்குள் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழும்போது அவர்களுக்கு இந்த விதமான ஆசீர்வாதங்களைக் கர்த்தர் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். எனக்கு அன்பானவர்களே, வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் அப்படியே செய்வார் நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக உங்களுடைய விசுவாச ஜீவியத்தில் நிலைத்திருந்து இந்த ஏழுவிதமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

# நியாயத்தீர்ப்பு உண்டென நாம் ஏன் நம்புகிறோம்

## Why We Believe In The Judgment Day

*- J.C.Choate*



நியாயத்தீர்ப்பு நாள் ஒன்று இருக்குமென வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதாவது நாம் நம்மைக் குறித்து கணக்கொப்புவிப்பவர்களாயிருக்கிறோம் என்றும் நாம் நம்முடைய வாழ்வில் சொல்லிய, செய்த எல்லாவற்றிற்கும் காரணம் ஒப்புவிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம் என்றும் பொருள்படுகிறது. அதிகமானோர் தாங்கள் செய்து ள்ள ஏதோ ஒன்றிற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றோம் என்ற எண்ணத்தையே விரும்புகிறதில்லை. அவர்கள் தவறு செய்யும்போது போலீசுக்குப் பதில் சொல்லவும் பொறுப்புடையவர்களாயிருக்கிறோம் என்பதற்கும் விருப்பப்படுகிறதில்லை. ஆயினும் இது வாழ்வின் உண்மையாயிருக்கிறது. கூலிக்கு வேலைசெய்கிறவர் தங்களுடைய எஜமானுக்குப் பதிலளிக்கவேண்டும்; பள்ளிக்கு அல்லது கல்லூரிக்குச் செல்லுகிறவர் தேர்வு நாளை சந்தித்தே ஆகவேண்டும்; இராணுவத்தில் பணிசெய்கிறவர் தங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்பிக்க வேண்டும், இதுபோல அநேகக் காரியங்கள் வித்தியாசப்பட்ட நம்முடைய ஜீவியத்தில் காணப்படுகிறது. நாம் தலைவராகவோ, பணக்காரராகவோ அல்லது மரித்தவராகவோ இல்லாவிட்டால் இப்பேர்பட்ட பொறுப்புகளுக்குத் தப்பித்துக் கொள்வது எவ்வழியிலும் கடினமானதே, ஆனால் பணக்காரராயிருந்தபோதிலும், தேசங்களுக்குத் தலைவராக இருந்தபோதிலும் மற்றும் உயிருள்ள அனைவரும், மரித்தவர்களும் ஒருநாள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன் நிற்க வேண்டும்.

எபிரெய ஆசிரியர், "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே," (எபி.9:27) என்கிறார். ஆனால் யார் அங்கே இருப்பார்? பவுல் நமக்குச் சொல்லுகிறார், இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்: "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரி.5:10). அங்கே நியாயத்தீர்ப்பு மட்டும் இருக்காது, நாமெல்லாரும் கூட அங்கே இருப்போம், மேலும் நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக வெளிப்படுவோம், எல்லாரும் தங்களுடைய கிரியைகளுக்குத் தக்கபடி நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடைவோம்.

பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு, "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிற தென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி; முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவுயாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்'' (ரோம.14:7–12).

அத்தேனே பட்டணத்தாரிடம் பேசுகையில், பவுல், "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்'' (அப்.17:30,31) தேவன் இந்த உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அவருடைய நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கும் என்று பொருள்படும். இது அநியாயமான விதத்திலும் நடக்காது மேலும் அவர் பாரபட்சம் காண்பிக்கவும் மாட்டார் அல்லது ஒருவரிடம் பட்சமாகவும் இன்னொருவரிடம் பார பட்சமாகவும் இருக்கமாட்டார். கர்த்தருடைய வருகையிலும் இவ்விதமாகவே நடக்கும். கிறிஸ்து அந்த நாளைக் குறித்து நமக்குச் சொல்லுகையில் தேவதூதர்களும் அந்நாளை அறியார்கள், பரலோகத்திலிருக்கிற பிதா ஒருவரே அறிவார். தேவதூதர்களும் அறியாது, பிதா ஒருவரே அறிவார் என்றால், பின் மனிதன் எவ்வாறு அறிவான்? நிச்சயமாக கிறிஸ்து மீண்டும் எப்பொழுது வருவார் என்பதை மனதில் அறியமாட்டான், மேலும் நியாயத்தீர்ப்பு எப்போது நடைபெறும் என்பதையும் அவன் அறியமாட்டான். அத்தோடுகூட தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மரணத்தினின்று எழுப்பியவர் மற்ற மனிதர்களுக்கும் இதை உறுதியளித்து அவர்மூலமாகவே தேவன் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார் என நிச்சயமாக அறிவுறுத்தப்படுகிறோம். பேலிக்ஸ் முன் பவுல் நின்று அவனுக்குப் பிரசங்கித்தபோது இவ்வாறாக அறிவுறுத்தப்படுகிறோம். வேதவாக்கியம் கூறுகிறது, "அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்'' (அப்.24:25). பேலிக்ஸ் வாழ்ந்துகொண்டிருந்த வாழ்வை அறிந்தவனாய், அவன் கணக்கொப்புவிக்க வேண்டியவனாகவும் அவனுடைய செய்கைகள் அனைத்திற்கும் அவன் தேவனுக்குப் பதிலளிக்க வேண்டியவனாகவு மிருக்கிறான் என்று பவுல் அவனை எச்சரிக்கத் துணிந்தான். பேலிக்ஸ் பயமடைந்தது ஆச்சரியமல்ல. அது அவனைப் பயமுறுத்தியது. ஆயினும், அவன் அவற்றில் கவனம்செலுத்தவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றே, ஆனால் தனக்குச் சமயமானபோது அழைப்பதாகச் சொல்லி பவுலை அனுப்பிவிட்டான். நாம் அறிந்துள்ளபடி, அதன்பின் அவன் ஒருபோதும் பவுலை அழைக்கவில்லை, இந்நிலையிலே அவன் மரித்துப்போனான். என்ன பரிதாபம்!

இயேசு தம்முடைய நாட்களிலிருந்த மதவைராக்கியமுள்ளவர்களிடம் பேசுகையில், "விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க,

நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்" (மத்.12:34–37). ஒருவன் தான் செய்கிறதைக் குறித்து உணர்வுள்ளவனா யிருப்பது மாத்திரமல்ல, தன் நினைவுகளைக் குறித்தும் தான் என்ன பேசுகிறோம் என்பதைக் குறித்தும் உணர்வுள்ளவனாயிருக்க வேண்டும். இவையெல்லாம் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு ஒரு மனிதன் எப்படிப்பட்டவனாயிருக்கிறான் என்பதைத் தெரியப்படுத்துகிறதாயிருக்கிறது. ஆனால் தான் செய்கிறதைக்குறித்து அல்லது சொல்லுகிறதைக் குறித்து அக்கறையில்லாத ஒருவன் இவையெல்லாவற்றிற்கும் ஒருநாள் கணக்கொப்புவிக்க வேண்டுமென்பதை தன் மனதில் கொள்ளவேண்டும். அது ஒருவனை அவன் செயல்படும் முன் அல்லது பேசுகிறதற்குமுன் அதிக ஆழ்ந்த யோசனைக்குள்ளாக்கி இருமுறை அவனை சிந்திக்கப்பண்ணுகிறது என்பதை அறியவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவன் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாள் வருமென சொல்லுகிறார் (ரோ.2:16). எபிரெய ஆசிரியர் நம்மை நினைப்பூட்டுகிறார், "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (எபி.4:12,13). பவுல் சொன்னான், "ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாயநாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆதலால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதென்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (1கொரி.4:3–5). மீண்டும் பவுல், "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது;" (2தீமோ.4:1) என்றான். பவுல் தொடர்ந்து தன்னைக் குறித்து, "இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு

மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' (2தீமோ.4:8) என்று சொன்னான். பவுல் கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதியாயிருக்கிறார் என்றும் அவர் நீதியின் கிரீடத்தைத் தனக்கு அந்நாளிலே, அதாவது நியாயத்தீர்ப்பு நாளிலே தருவார் என்றும் அந்த வெகுமதியினை தனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அல்லது அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக் கிறவர்களுக்கும் அதைத் தந்தருளுவார் என்று கூறுவதைக் கவனியுங்கள்.

எபிரெய ஆசிரியர் யாவருக்கும் நியாயாதிபதியாயிருக்கிற கர்த்தரைக் குறித்துப் பேசுகிறார் (எபி.12:23). அதன் பின் எபிரெயர் 13:4–ல் "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்'' என்கிறார்.

மத்தேயு 25–ல் கிறிஸ்து சொல்வதை நாம் அறிந்திருக்கிறோம், "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள், மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்'' (மத்.25:31–33) என்றார். இங்கே கர்த்தர் நியாயத்தீர்ப்பினை ஒரு நாளில் சம்பவிக்கும் நாளாக படம்பிடித்துக் காட்டுகின்றார். இது அவருடைய வருகையின் நாளில் இருக்கும், எல்லா தேசங்களும் ஜனங்களும் அவருக்கு முன்பாக கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். அந்த சமயத்தில் அவர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிப்பதைப்போல நன்மையானவற்றை தீமையானவற்றிலிருந்து பிரிப்பார். அவருடைய வலது கை பக்கத்திலிருக்கும் செம்மறியாடுகள் நீதிமான்களாக, கிறிஸ்தவர்களாக, சபையாக குறிப்பிடப்படும். அவருடைய இடது கைப் பக்கத்தில் உள்ள வெள்ளாடுகள் துன்மார்க்கராகவும், வஞ்சகர்களாகவும், அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாகவும் குறிப்பிடப்படும். நியாயத்தீர்ப்பு நடந்தேறியபின், துன்மார்க்கர், "....நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்'' (மத்.25:46) என வேதவாக்கியம் கூறுகிறது.

இப்போது இவையெல்லாவற்றையும் சுருக்கமாகக் காண்கையில், நாம் என்ன கண்டுகொள்கிறோம் என்பதைத் தயவுசெய்து கவனிப்போம்:

1. தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நாளில் வருகின்றது, ஆனால் அது மரணத்திற்குப்பின் அல்லது கர்த்தருடைய வருகையில் இருக்கும்.

2. அந்த மகாநாளில் எல்லாரும் இருப்போம். கற்பனை பண்ணுங்கள் என்றென்றும் வாழ்ந்திருக்கிற அல்லது என்றென்றும் வாழவிருக்கிற அனைவரும் அந்த நாளில் அங்கே இருப்பார்கள். ஒருவனும் மறைந்து கொள்ளவோ அல்லது தப்பித்துக்கொள்ளவோ முடியாது. ஒருவனும் கவனித்தும் கவனிக்காமலிருக்க இயலாது. இதில் சிறியோர், பெரியோர், நல்லோர் தீயோர், ஐசுவரியவான் ஏழை, அரசன் ஆண்டி எல்லோரும் சேர்க்கப்படுவார்கள்.

3. தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலம் நியாயந்தீர்ப்பார்.

4. இது ஒரு பாரபட்சமற்றதாயிருக்கும், எல்லாரும் நல்லவராயிருந்தாலும், தீயவராயிருந்தாலும் அவரவர் கிரியைகளுக்குத் தக்கபடி நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

5. ஒவ்வொரு வீணான வார்த்தையும், ஒவ்வொரு செய்கையும், ஒவ்வொரு ரகசியமான நினைவும் அந்த மகா நாளில் நியாயந்தீர்க்கப்படும்.

6. இந்த நியாயத்தீர்ப்பே முடிவானது. அங்கே இரண்டாவது சந்தர்ப்பங்களுக்கு இடமில்லை. இது ஒரு நீதியான நியாயத்தீர்ப்பாகும்.

7. அந்த நாளில் நீதிமான் நித்திய ஜீவனைப்பெறுவான், துன்மார்க்கனோ சாத்தானின் நரகத்தில் நித்திய அழிவைப் பெறுவான்.

நீங்கள் நியாயத்தீர்ப்பிலே கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? கிறிஸ்து சொன்னதை நினைவுகூருங்கள், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" (யோவா.12:48) என்றார். மேலும், கிறிஸ்து "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" (யோவா.5:25–30).

என்னுடைய நண்பர்களே, இயேசுவினிடத்தில் விசுவாசம் வைப்பதன் மூலமும், உன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புவதன் மூலமும், கிறிஸ்துவிலுள்ள உன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிடுவதன் மூலமும், உன்னுடைய பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதன் மூலமும் நீங்கள் அந்த மகா நாளுக்கென்று ஆயத்தமாகலாம். இவற்றை செய்வதனால், கர்த்தர் உன்னை இரட்சித்து, தம்முடைய சபையில் உன்னைச் சேர்த்துக்கொள்வார். அதன்பின் ஒரு கிறிஸ்தவனாக, நீ கர்த்தரை சேவித்து, மரணபரியந்தம் அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்தால், ஒரு நாள் அவர் முன் நிற்கையில், அவர் உன்னை நோக்கி, "நல்லது, உத்தமும் உண்மையும் உள்ள ஊழியக்காரனே உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று சொல்லுவதை கேட்பாய். அது ஆச்சரியமானதாக இருக்காதா? இன்னும் சமயத்தையும் தருணத்தையும் நீ பெற்றிருக்கும்போது, அதைப்

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே
துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது
துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திறகுக்
கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? -1பேது.4:17

## பொது அறிவு சோதனை

1. ஒரு விமானம் 900 மைல் வேகத்தை எட்டும்போது ஒலியிருக்காது, ஏனெனில்
   அ) அது கீழே விழுந்துவிடும் ஆ) அந்த அளவு வேகத்தில் விமானம் சப்தமிடாது இ) விமானத்தின் வேகம் ஒலியின் வேகத்தைவிட அதிகம்
2. வௌவால் இருட்டில் எவ்வாறு வேகமாக பறக்கிறது?
   அ) அதன் எதிரொலியால் அறிந்து செயல்படுகிறது ஆ) அவைகளால் இருளில் பொருள்களை பார்க்க முடியும் இ) அவை குறைந்த வேகத்திலே பறக்கின்றன
3. சந்திரன் காற்று மண்டலத்தைப் பெற்றிருக்கவில்லை, ஏனெனில்
   அ) அதன் தடிப்பு தன்மை குறைவானது ஆ) சந்திரனிலுள்ள பாறைகள் எந்தவிதமான வாயுவையும் வெளிவிடுவதில்லை இ) சூரியனிடமிருந்து அதன் அருகாமை
4. மலை உச்சியில் உருளைக் கிழங்குகள் வேக அதிக நேரம் எடுத்துக்கொள்கின்றன, ஏனெனில்
   அ) அங்கு காற்றின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளது ஆ) அங்கு காற்றின் அழுத்தம் மிக அதிகமாக உள்ளது இ) அங்கு குளிர் அதிகமாக உள்ளது
5. சமவெப்ப நிலையில் நீரைக் காட்டிலும் நீராவியால் உடம்பில் ஏற்படும் புண்மோசமானது, ஏனெனில்
   அ) அது ஒரு வாயு ஆ) அந்த வெப்ப நிலையில் அது அதிக கலோரி வெப்பத்தை கொண்டிருக்கும் இ) அது குறைந்த அளவு நீரினைக் கொண்டிருக்கும்

விடைகள்: 1. இ 2. அ 3. அ 4. அ 5. ஆ

### வேத அறிவுப் போட்டி எண் 80-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| C.H. வித்யா ராணி | -சென்னை |
| J. நிர்மலா ஜான் | -மதுரை |
| N. கமலவேணி | -சென்னை |
| A. ஜோதிகாந்தம் | -போடப்பாறை |
| P. அலிஸ் மேரியம்மாள் | -வத்தலக்குண்டு |
| S. ஆனந்தராஜ் | -ஈரோடு |
| IRA. எதிராஜன் | -சங்கரி |
| Mrs. மரகதம் | -கோம்பை |
| A.ஆனந்த | -நாகமலை |
| N.ஜான் செல்லையா | -செட்டிபாளையம் |

### வேத அறிவுப் போட்டி எண் 80-ன் விடைகள்

1.நீதியுள்ள, பாவியின்மேல் சங்.7:11
2.சவுல் - 1சாமு.20:24
3. சிம்சோன் - நியாயா.16:16,17
4.மோசே - உபா.34:6
5. யாக்கோபு - ஆதி.30:2
6. பவுல் - அப்.21:13
7. பைத்தியமாயிருக்கிறது 1கொரி.3:19
8.அல்லவே - கலா.3:21
9. நற்கிரியைகளைச் - தீத்து3:14
10. உறுதிப்படும் பெலனில்லையே - எபி.9:17

கிறிஸ்துவ தலைமைத்துவ பயிற்சி பாடங்கள்
Christian Leadership Training Course

பாடம் - 15

# சுயஉதவி சபையைக்கட்டுவது
## Building a Self-Supporting Church

J.C.Choate

*-Translated by G.Daniyal, Chennai*

பிரசங்கிக்க விரும்புகிற அநேக வாலிபர்களை நீங்கள் கேட்டால் உடனடியாக அவர்கள் சொல்வது தாங்கள் முழுநேர பிரசங்கியாராக இருக்க வேண்டுமென்பதே. அவர்கள் பகுதிநேர வேலைகளைச்செய்து கொண்டு தங்களுடைய ஜீவனத்துக்குத் தேவையானதை சம்பாதித்து வாரத்தின் கடைசி நாட்களில் அல்லது மற்ற நாட்களில் பிரசங்கிக்க விரும்புவதில்லை. நான் அநேகரிடத்தில் பேசி இந்த விதமான யோசனையைச் சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர்கள் எல்லோரும் திரும்பவந்து சொல்லும் பதில் என்னவென்றால் நான் முழுநேரமும் பிரசங்கிக்க விரும்புகிறேன் என்பதே. இதன் பொருள் என்ன? தங்களுக்கு முழுநேர ஊதியம் வேண்டுமென்று அவர்கள் விரும்புவதே. ஆனால் அவர்கள் சார்ந்திருக்கிற சபை இன்னும் வளர்ச்சியடையாமல் இருப்பதும், அங்குள்ள கிறிஸ்தவர்கள் குறைந்த எண்ணிக்கையிலிருப்பதினால் அவர்கள் தங்கள் பிரசங்கியார்களுக்கு முழுநேர உதவி செய்ய முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனுடைய பொருள் என்னவென்றால் ஒரு மேல்நாட்டு உதவியை நாடிச்செல்ல வேண்டும் என்பதே. இந்த விதமான ஒரு தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட பிறகு அநேகர் என்ன செய்வார்கள்? அவர்கள் முழுநேர ஊதியம் வாங்குவார்கள் அவ்வளவுதான். இந்த விதமான ஏற்பாட்டினால் பிரசங்கியாரோ சபையோ பயனடைவதில்லை.

நீங்கள் ஒரு இளம் பிரசங்கியாராக இருந்து உண்மையாகவே தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும்படி அர்ப்பணித்திருந்தால் ஒவ்வொருபடியாக முன்னேறி செல்லுங்கள். பிரசங்கியாராக இருப்பது என்பது பிரசங்கிப்பது மட்டுமல்ல இதைவிட அதிகமானவைகளை முழுநேர பிரசங்கியாராகயிருப்பதற்குச் செய்ய வேண்டும். முதலாவதாக அதற்கான பயிற்சியைப்பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய கல்வித்தகுதியை வீட்டிலிருந்தோ, கூடுமானால் கல்லூரியிலிருந்தோ, பெற்றுக்கொள்ளுங்கள். இதை நீங்கள் செய்து கொண்டிருக்கும்போதே உங்கள் வேதாகமத்தை வாசித்துக் கற்றுக்கொள்ளுங்கள். மற்ற தொடர்புள்ள புத்தகங்களை உங்களுடைய படிப்பில் உதவியாய் இருக்கும்படி படிக்கலாம். நீங்கள் பிராந்திய சபையிலே அங்கத்தினராக இருந்தால் சபையின் எல்லா நடவடிக்கையிலும் பங்கெடுங்கள். உங்கள் பகுதியிலே பிரசங்கியார் பயிற்சி பள்ளி இருக்குமானால் ஒன்று இரண்டு வருடங்கள் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

நீங்கள் வீட்டிலிருக்கும்போது கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரசங்கியுங்கள். சபை உங்களுக்கு உதவ முடியாத பட்சத்திலும் நீங்கள் பிரசங்கிக்க விரும்பினால் திருமணம்செய்து கொண்டு ஒரு வேலையையும் தேடிக்கொண்டு பிரசங்கியுங்கள். உங்களுடைய ஜீவனத்துக்காக வேலை செய்யும் போதே பிரசங்கிக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுல் இதைச் செய்தார் (அப்.18:3). என்னுடைய

சொந்தக் கைகளினாலே வேலை செய்தேன் (1கொரிந்தியர் 4:12). ஆனால் பிரசங்கிக்க அது அவருக்கு தடையாயிருந்ததில்லை உண்மையாய் தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கித்தால் உங்களுக்கும் அது தடையாய் இராது. மெய்யாகவே நீங்கள் பிரசங்கிக்க தீர்மானம் உள்ளவராகயிருந்தால் அதற்கு ஒரு வழியை கண்டுபிடித்துவிடுவீர்கள்.

மற்றவர்களோடு சேர்ந்து ஊழியம் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். மற்ற பிரசங்கியார்களை பகைவர்களாகவோ, போட்டியாளர்களாகவோ எண்ணாதீர்கள். அவர்கள் உங்களை நீங்கள் நினைக்கிறபடி நடத்தாவிட்டாலும், நீங்கள் அவர்களிடம் சரியான மனப்பான்மையோடு நடந்து கொள்ளவேண்டும்.

நீங்கள் ஒரு பிராந்திய சபையில் ஊழியம் செய்பவராக இருக்கலாம் அல்லது இன்னொரு பகுதியில் சென்று ஊழியம் தொடங்கி அங்கேயே தங்கி காலப்போக்கிலே உங்களுக்கு முழு உதவியையும் செய்கின்ற அளவுக்கு அதை வளர்க்கலாம். இப்படிச் செய்யும்போது ஒரு எஜமானைப் போல பிரசங்கிப்பது , போதிப்பது, பாடுவது, ஜெபிப்பது போன்றவைகளை செய்யாமல் சபையிலுள்ள சகோதரர்களும் வளர்ச்சியடையும்படி இப்படிபட்டவைகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த உதவியாயிருங்கள். நீங்கள் அவர்களை கனம் பண்ணி அவர்களிலே உங்கள் உண்மையும் நேர்மையும் ஊழியம் செய்வதற்கான ஆதரவைத்தையும் நீங்கள் காண்பிப்பதினால் ஏற்படுத்தும் மரியாதை நிமித்தம் அவர்கள் உங்களுக்கு முழுஉதவியும் செய்யக் கூடிய அளவிற்கு வளர்ச்சியடைவார்கள். இதற்குபிறகு உங்களைக் குறித்து நீங்கள் முக்கியமானவராகவோ, பெருமைபாராட்டவோ செய்யாதீர்கள். மாறாக எப்பொழுதும் போல தாழ்மையாகவும், சகோதரர்கள் மேல் அன்புள்ளவராகவும், உங்களை சுற்றியிருக்கிற இரட்சிக்கப்படாதவர்களுக்கு சுவிசேஷத்தை கொண்டு செல்கிற வாஞ்சையுள்ளவர்களாகவும் இருங்கள்.

கர்த்தருக்கென்று எதையாகிலும் பெரிதாக செய்யவிரும்பினால் சுயஉதவி பெறக்கூடிய சபையைக் கட்டுங்கள். இது உங்களுக்கு முன்பாகயிருக்கிற உண்மையான பரீட்சையாக இருக்கும். மற்ற பிரசங்கியார்களுக்கும் சபைகளுக்கும் இது ஒருபெரிய மாதிரியாயிருக்கும். இந்த உலகத்திலிருக்ககூடிய சபை செய்ய வேண்டியது என்ன வென்றால் அது சுயாதீனம் உள்ளதாக இருக்க வேண்டும். சுய உதவி செய்யக்கூடிய சபைகள் மூப்பர்கள், உதவிக்காரர்கள், தன்னுடைய பிரசங்கியார்களுக்கு உதவி செய்து அவர்களுடைய தேவைகளை சந்திக்கிறதாயும், தங்கள் சொந்த கால்களிலே நின்று வெளியிலிருந்து உதவியை எதிர்பாராமல் தங்கள் தேவைகளை சந்தித்துக்கொள்கிற நிலையிலும் இருக்க வேண்டும். இது எல்லோருக்கும் நம்மால் எது முடியுமோ அதை மீண்டும் உறுதி செய்வதாக அமையும்.

அநேக சகோதரர்கள் இந்நாள் வரைக்கும் மற்றவர்களிடம் உதவியை எதிர்ப்பார்க்கும் மன நிலையிலிருந்து கொண்டு தங்களின் சுய வளர்ச்சியைக் குறித்த விஷயத்தில் தோல்வியுற்றவர்களாகவே இருக்கிறார்கள். இன்னுங்கூட தங்களுடைய சொந்த தேவைகளை கவனிக்கிற நிலையில் கரங்களை நீட்டுகின்ற நிலையிலேயே இருக்கின்றார்கள். சபையிலே எத்தனை குடும்பங்கள் தங்கள் சுயதேவைகளைச் சந்திக்கின்ற நிலையிலிருக்கின்றன? அவர்கள் வசதியானவர்களாகவோ, அதிக ஊதியம் வாங்குகிறவர்களாகவோ அல்லது வாங்காமலோ இருக்கலாம். ஆனாலும்

தங்களுடைய சொந்தத் தேவைகளைச் சந்திக்கிற அளவிற்கு அவர்கள் பொருள் ஈட்டுகிறார்கள். இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் அந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் ஏன் சபையின் தேவைகளைக் குறித்து கவனிக்கக் கூடாது? இது ஒரு குடும்பத்தால் மட்டும் ஆக கூடியதல்ல. அநேக குடும்பங்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய வருமானத்தினால் 10 அல்லது 12 சதவீதத்தை தேவனுக்குக் கொடுத்தால் தங்கள் சொந்த பிரசங்கியாருக்கு உதவி அளிக்க முடியும். இந்த சுதந்திர நிலையை அவர்கள் எட்டிவிட்டால் பின்பு ஒருபோதும் மற்றவர் மீது சார்ந்திருக்க விரும்பமாட்டார்கள்.

இவ்வாறாக சுற்றிலுமுள்ள சில சுயஉதவி சபைகள் தங்கள் தேவைகளை சந்திக்கிற நிலையில் இருக்கும்போது மற்ற சபைகள் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்ற ஊக்கப்படுத்தப் படுகிறார்கள். மேலும் இந்த விதமான சபைகள் சுய தேவைகளை சந்திக்கிற அளவுக்கு வளர்ச்சியடைந்த பிறகு மற்ற காரியங்களைச் செய்யலாம். பல இடங்களுக்குச் சென்று ஊழியம் செய்யக்கூடிய ஊழியக்காரர்களை தங்களிடமிருந்து அனுப்பமுடியும். பிரசங்கியார் பயிற்சிபள்ளிகளுக்கு உதவமுடியும். ஒரு நாளிலே அவர்கள் பகுதியிலே ஒரு கிறிஸ்தவ கல்லூரி தொடங்குகிற அளவிற்கு அங்கே கிறிஸ்தவர்கள் நிரம்பியிருப்பார்கள். மேலும் அநாதை இல்லங்கள் போன்ற நல்ல வேலைகளையும் அவர்கள் செய்ய முடியும்.


மறுபடியுமாக ஒரு பிரசங்கியாராக நீங்கள் என்ன செய்ய முடியும்? சபையானது எண்ணிக்கையிலே வளர்வதனுடைய முக்கியத்துவத்தை உணர்த்துங்கள். அதே சமயம் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய தன்மையில் வளர்ந்து தாங்கள் கொடுப்பதிலும் ஒன்றாக கற்றுக்கொள்ளக்கூடிய காரியங்களில் வளர்வதிலும் ஊக்கப்படுத்துங்கள். அவர்களோடு உட்கார்ந்து அவர்களிடமுள்ள எல்லாவற்றையும் வடிகட்டிவிடாதீர்கள். எதிர்மறையாக, சோம்பலாக எந்தவிதமான இலக்கும், முயற்சியும், இல்லாமல் இருக்காதீர்கள்.

புறப்பட்டு போய், வேலைசெய்து உங்கள் சபை உங்களுடைய உள்ளூர் அங்கத்தினர்களால் முழுவதும் உங்களுக்கு உதவத் தீர்மானிக்கும்படி சுதந்திரமான சபையாக மாறுவதற்கு நீங்கள் சபைக்கு உதவுங்கள். இது நடைபெறும்போது அது தகுதி உள்ள இலக்காகவும், வேலை செய்ய அந்த நாள் கொண்டாடப்பட வேண்டிய நாளாகவும் இருக்கும். தேவனுடைய உதவியோடு இது மெய்யாகும்.

## வெற்றிக்கு ஐந்து முதல்கள்
## Five Firsts to Success

1. நாளின் முதல் மணிநேரத்தைத் தேவனுக்குக் கொடு
2. வாரத்தின் முதல் நாளை தேவனுக்குக் கொடு
3. வருமானத்தின் முதல் பகுதியை தேவனுக்குக் கொடு
4. ஒவ்வொரு தீர்மானத்தில் முதல் எண்ணத்தை தேவனுக்குக் கொடு
5. உன் இருதயத்தில் முதல் இடத்தைத் தேவனுக்குக் கொடு

*- The VOTI*




# பரிசுத்த வேதாகமத்தின் மூன்று வரலாற்று காலங்கள்

*-S.Sengol Rayan, Pondicherry*

**–சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**3. கிறிஸ்தவர்களின் காலம் (அல்லது) கடைசி காலமாகிய சபையின் காலம்:**

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த முதல் பெந்தேகொஸ்தே நாள் தொடங்கி உலகத்தின் முடிவு மட்டும் அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் இறுதி நியாயத்தீர்ப்பின் காலம் வரை தொடருகிறது. (தோராயமான கால அளவு கி.பி.33–லிருந்து நித்தியம் வரை மத்.16:18; அப்.2:1–47; 1கொரி.15:24) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் உலகத்திலுள்ள அனைவருடைய இரட்சிப்புக்காக கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாடு உபதேசமே நாம் கடைபிடிக்க வேண்டிய கட்டளையாகவும், சட்டங்களாகவும் கொடுக்கப்பட்டுள்ளது (மத்.28:18–20; மாற்.16:15,16). முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவைப்பின் பற்றியவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப்படிந்தார்கள் (அப்.2:38,41,42; ரோம.6:17). கிறிஸ்தவ சகாப்தமாகிய இந்த புதிய ஏற்பாடு கிறிஸ்தவத்திற்கு சிலுவையில் ஒழிந்து போன மோசேயின் நியாயப்பிரமாணம் செல்லுபடியாகாது (ரோம.7:1–6; கலா.3:16–25). எனவே கிறிஸ்துவின் உபதேசமே நாம் கைக்கொள்ள வேண்டிய சட்டங்களாக இருக்கிறது (2தீமோ.1:13; யோவா.8:31; 2யோவா.9:11; மத்.28:18–20; யோவா.14:15). அப்போஸ்தலர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு அல்ல கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கைக்கே ஊழியக்காரராக இருந்தார்கள் (2கொரி.3:6ஙங 2யோவா.9–11) கிறிஸ்து உயிர்த்தெழுந்து ஐம்பது நாட்களுக்குப்பின் வந்த முதல் பெந்தேகொஸ்தே தினத்திலிருந்து அதாவது சபையின் ஆரம்ப நாட்களிலிருந்து உலகத்தின் முடிவு வரையிலும் உள்ள காலங்கள் மற்றும் இறுதி நியாயத்தீர்ப்பு வரையிலும் கிறிஸ்துவின் சுயாதீனப்பிரமாணமாகிய புதிய ஏற்பாடு பிரமாணமே ஆட்சிசெய்யும் (யாக்.2:12; யோவா.12:48; ரோம.7:1–6). கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு பிரமாணத்தில் யூதனென்றும், யூதர் அல்லாதவனென்றும் அடிமையென்றும், சுயாதீனன் என்றும் பாகுபாடு இல்லாமல் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் அதாவது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிற யாவரும் கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் ஒப்புரவாக்கப்பட்டார்கள் (அப்.2:38, 41, 47; 18:8; எபே.1:13; 2:8,16).

வேதாகமம் இந்த மூன்று காலங்களையும் பகுத்தறிந்து அவைகளில் எந்தெந்த பகுதிகள் முற்பிதாக்களுக்கும் மற்றும் கடந்தகால இஸ்ரவேலருக்கும் எவ்வாறு சம்பந்தப்படுகிறது என்றும் வேதாகமத்தின் எந்தபகுதிகள் அல்லது எந்த உபதேச சட்டங்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் வந்த சபையின் காலங்களிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும், மற்றும் உலகத்திலுள்ள ஒவ்வொரு தனிநபருக்கும் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் முக்கியமாக அறிந்துகொள்ளவேண்டும்.

கோத்திரப் பிதாக்களின் காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளைகளும் அதன் குடும்ப ஆட்சி முறைகளும் மோசேயின் நியாயப்பிரமாண காலத்திலிருந்த தேசிய ஆட்சி முறைகளுக்குப் பொருந்தாது. அதே போல யூத சகாப்தத்திலிருந்த நியாயப்பிரமாண சட்டங்கள் தற்காலத்தில் நடைமுறையிலுள்ள புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களுக்கு பொருந்தாது. ஆயினும் அக்காலங்களிலுள்ள பல நிகழ்ச்சிகளும், அதன் சரித்திரங்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் தெரிந்து கொள்ளப்படுகிறது கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன் உதாரணங்களாவும், எச்சரிப்புகளாகவும் பயனுள்ள அறிவுரைகளாகவும் இருக்கின்றன (ரோம.15:4; 1கொரி.10:6,11).

*வாசகர் கவனத்திற்கு,*


*இவ்விதழை பெற்றுக்கொள்ள உங்கள் தெளிவான முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்புங்கள். முகவரி மாற்றமுள்ளவர்கள் உங்கள் பதிவு எண்ணை குறிப்பிட்டு தெரியப்படுத்தவும்.*

*ஆசிரியர்.*

**ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்டக்கடவன் - வெளி.2:7**

# உங்களுக்கோர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை
தாவீது – யோனத்தானின் உரையாடல் மற்றும் தேவ செய்தியை
கொழும்பு சர்வதேச வானொலி **MW 873 KHZ** - ல்
காலை 8.45 முதல் 9.00மணி வரை கேட்டு பயன்பெறுங்கள்
இது கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி




## ஜெபியுங்கள்

- இம்மாதம் கொடைக்கானலில் நடைபெறவிருக்கும் முதலாவது தமிழக ஊழியர் கூடுகைக்காக...
- புதிதாக இலங்கை சர்வதேச ஒலிபரப்பில் வெளிவரும் நிகழ்ச்சிக்காக ...
- சகோ.பிரபாகரனின் மனைவி சுகப்பிரசவம் அடைய ...
- வின் டிவியில் திங்கள் முதல் வெள்ளிவரை வெளிவரும் நமது நிகழ்ச்சிகளுக்காக ...
- CD&DVD ஊழியங்களுக்காக ...







# ஆராதனைக்குச் செல்வது மிகச் சிரமமாயிருக்கிறது

## Going To Worship Is Too Much Trouble

*-Betty Burton Choate*

ஜனங்கள் தங்களுடைய வயோதிப நாட்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் எழுந்து வேலைக்குச் செல்லுகின்றனர். சிலர் வயல்களுக்கு அதிகதூரம் நடந்து செல்கின்றனர், மற்றவர்கள் – சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர், பஸ்,அல்லது தங்களுடைய சொந்த கார் போன்றவற்றில் தங்களுடைய வேலைக்கு சவாரி செய்யலாம் ஆனால் ஒருவருடைய வேலைஸ்தலத்திற்கு செல்ல எடுத்துக்கொள்ளும் சிரத்தை மிகப்பயங்கரமானதாக இருக்கலாம். என்றாலும், ஒருவன் வாழவேண்டுமென்றால், உணவு வாங்குவதற்கும் வாடகை செலுத்துவதற்கு அல்லது வீட்டிற்கு வாடகை செலுத்துவதற்கும், தன்னுடைய பொறுப்பைவகிப்பதற்கும் அதன்பின் சம்பளம் பெறுவதற்கும் ஒருவன் கட்டாயம் வேலை செய்தாக வேண்டும்.

மாறாக, ஒரு புதிய வாரத் துவக்கத்திற்கு அடையாளமாகவும், தம்முடைய ஜனங்கள் தம்மிடத்தில் நெருங்கி வந்து சேவிக்கவும் ஒருவருக்கொருவர் நெருக்கமாயிருக்கவும் தேவன் தமக்கென்று ஒரு நாளை நியமித்திருக்கிறார். புதியஏற்பாட்டில் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் – நாம் ஞாயிறு என அழைக்கிற அந்நாளில் ஆராதிக்கும்படி கூடிவந்ததற்கான ஆதாரங்களையும், திருஷ்டாந்தங்களையும் நாம் கொண்டிருக்கிறோம்.

இருந்தபோதிலும், அசௌரியத்தோடும் ஆராதிக்கச் செல்லுமிடத்திற்கான செலவுகளினிமித்தமாகவும் தங்களை சிரமப்படுத்திக்கொள்ளுவது தேவையற்ற ஒன்று எனக் காண்கிற கிறிஸ்தவர்கள் உண்டு. சிலர், "நான் வீட்டிலே என்னுடைய ஜெபங்களை ஏறெடுத்துக் கொள்ளுவேன்" எனக் கூறி தங்களுடைய மனசாட்சியை சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். "ஆனால் வீட்டிலுள்ள என் வேலைகளைசெய்வதற்கும், மார்க்கெட் செல்வதற்கும் ஒய்வெடுப்பதற்கும் எனக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே இருக்கிறது" என்ற வேறு காரணமும் உண்டு. தொடர்ந்து மற்றவர்கள் தாங்கள் ஆஜராகாத காரணத்திற்கு "பிரசங்கியாருடைய பிரசங்கம் சுவாரஸ்யமில்லாதிருக்கிறது"எனக்கூறி சபை ஊழியரை குற்றப்படுத்துவார்கள். ஆராதனையில் நான் எதையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை– நான் வெறுமனே வீட்டிலே தங்கியிருப்பேன் எனக் கூறுகின்றனர்.

சிலருடைய குடும்பங்களில், கணவன் ஆராதனைக்குச் செல்லுவான், ஆனால் அவன் தன்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்வதின் அவசியத்தை உணருவதில்லை. குறிப்பாக தன்னோடு கூட்டிச்செல்லும்போது உண்மையாகவே இது ஒரு பிரச்சனையா? அவன் தான் மட்டும் இப்போது ஆராதனையில்

கலந்துகொள்ளுவோம், பிள்ளைகள் பெரியவர்களாகும் போது செல்லலாம் எனக் கருதுகிறான்.

இந்த எல்லாவிதமான சாக்குப்போக்குகளும் இந்த மன நிலைகளும் எத்தனை தவறானது? தம்முடைய ஊழியம் முழுவதிலும் இயேசுவின் செய்தி "வாருங்கள் என்னைப்பின்பற்றுங்கள்"என்பதாகவே இருந்தது. அவர் ஒவ்வொரு காரியம் மற்றும் ஒவ்வொரு நபரைக் காட்டிலும் தமக்கே முதலிடம் கொடுக்குமாறு ஜனங்களைக் கேட்டுக்கொண்டார். மத்தேயு6:33ல் அவர் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்றார்.

நாம் எவ்விதமான "சிரமம்" அல்லது 'அசௌரிகம்' அல்லது "செலவு" போன்றவை அவரைப் பிரியப்படுத்தும்படிக்கு அவசியமானது என அவைகளைக்கடந்து செல்ல விருப்பமில்லாதவர்களாக இருந்தால் நாம் கிறிஸ்துவை முதலாவது தேட முடியாது அல்லது அவரைப்பின்பற்றவும் முடியாது.

எபிரெயர்10:25, "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்ல வேண்டும்" என விளக்குகிறது.

"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்".

"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன் படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்"

கிறிஸ்தவர் ஒருவருக்கொருவர் ஏன் கூடிவரவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் பல உண்டு.

**தேவனை ஆராதிக்க.** எபிரெயர்12:24 சபை கூடிவருதலைப் பற்றி ஒரு அழகான சித்திரம் வரைகிறது, "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய் நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்பதினாயிரமான தேவதூதர் களினிடத்திற்கும்,பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் ..... வந்து சேர்ந்தீர்கள்".

**கிறிஸ்துவின் தியாகத்தை நினைவு கூர.** அப்போஸ்தலர்20:7ல், பவுல்

சபையோடு சேர்ந்து ஆராதிப்பதற்கு ஒரு வாரம் துரோவா பட்டணத்தில் தங்கியிருந்தான் என வேதவாக்கியம் கூறுகிறது; "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்".

**கூடி ஆராய்வதன் மூலம் தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்ள.** "....சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவானாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"(2தீமோ.2:15). ஏன்? ஏனென்றால், "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது"(2தீமோ.3:16,17).

**ஒருவரோடொருவர் ஐக்கியங்கொள்ளுவதின் மூலம் பெலனைப் பெற்றுக் கொள்ள,** "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்"(மத்,18:20). எபிரெயர்10:24ன்படி நாம் ஒருவருக்கொருவர் அன்பிலும் நற்கிரியைகளிலும் உற்சாக மூட்டுகிறவர்களாயிருக்கிறோம். நாம் சகோதரரை ஒருபோதும் சந்திக்காதவர்களாகவும், அவர்கள் செய்கின்ற பணிகளில் பங்குகொள்ளாதவர்களாயிருப்போமானால், நாம் எவ்வாறு சகோதரரைஉற்சாகப்படுத்தி, பெலப்படுத்தக் கூடும்?

தேவனை ஆராதிக்கும்படிக்கு பரிசுத்தவான்களோடு கூடிவருவதை புறக்கணிக்கும் போது நம்முடைய வாழ்வில் சரியான சமநிலையைக் கொண்டிருக்க முடியாது ஒவ்வொரு சமயமும் ஒரு கிறிஸ்தவன் ஆராதனையைப் புறக்கணிப்பதையே தெரிவுசெய்கிறான், மேலும் அவன் தேவனையோ, ஆராதனையையோ சபையையோ தன் வாழ்வில் முதன்மையாக வைக்காத தன்னுடைய மாதிரியையே தன்னுடைய செல்வாக்கின் கீழ் இருப்பவர்களுக்கும் போதிக்கிறான். குறிப்பாக அவன் ஆராதனையிலும், வேதஆராய்ச்சியிலும், தேவனை அறியும் அறிவில் வளர்வதிலும் கலந்து கொள்ளாததின் மூலம் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களை ஆபத்திற்குள்ளாக்குகிறான்.

ஒரு வளர்ந்த கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தில் ஆராதனைக்குச் செல்ல இயலாத சூழ்நிலையைத் தான் ஒருபோதும் சபை கூடி வருதலை இழந்துவிடக்கூடாது என வெகு காலத்திற்கு முன்னே தீர்மானித்து விடுகிறான். ஞாயிற்று கிழமையில் அவன் இவ்வினாவைப்பற்றிய எந்த ஒரு புதிய தீர்மானத்தையும் உருவாக்குகிறதில்லை; அவன் தான் தேவனுடைய ஜனத்தைச் சேர்ந்தவன் என்பதை அறிகிறான், அவன் தன்னுடைய சிருஷ்டிகரை துதித்து அவருடைய இரட்சிப்பின் மாபெரும் கிரயத்தை நினைவுகூருகின்றான். எனவே அவன் ஆராதிக்கும்படி சபை கூடிவரும்போது சபையோடு ஐக்கியம் கொண்டிருப்பான்.

நீங்கள் தேவன் அறிவுறுத்தியிருக்கிறபடி தேவனை ஆராதிப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றிய காரியத்தில் தவறான தீர்மானத்தை உருவாக்கியிருப்பீர்களானால், தயவு செய்து திரும்பச் சென்று ஜெபத்துடனே உங்களுடைய தெரிந்து கொள்ளுதலைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். இதுவே தவறான ஒன்றும், உங்களுடைய நித்திய ஆக்கினையில் முடிவுபெறக்கூடிய ஒன்றாகவும் இருக்கிறது. உங்களுடைய இரட்சிப்பு மாபெரும் கிரயமாகிய தம்முடைய குமாரனின் மரணத்தில் தேவனால் நிறை வேற்றப்பட்டதாயிருக்கிறது.

உங்கள் நினைவுகளை கூர்ந்து கவனியுங்கள்;

அவைகள் வார்த்தைகளாக மாறுகின்றன

உங்கள் வார்த்தைகளை கூர்ந்து கவனியுங்கள்;

அவைகள் செயல்களாக மாறுகின்றன

உங்கள் செயல்களை கூர்ந்து கவனியுங்கள்;

அவைகள் பழக்கங்களாக மாறுகின்றன

உங்கள் பழக்கங்களை கூர்ந்து கவனியுங்கள்;

அவைகள் குணங்களாக மாறுகின்றன

உங்கள் குணங்களைக் கூர்ந்து கவனியுங்கள்;

அவை உங்கள் தலையெழுத்தாக மாறுகிறது.

*- The VOTI*

## நடப்புச் செய்திகள்

- உயர் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு இல்லாமல் மாணவர்களைச் சேர்க்க, மத்திய அரசு உத்தரவிட்டு இருக்கிறது.
- சென்னை உள்பட 6 மாநகராட்சிகளில் கோர்ட்டுகள் இரவு 8 மணி வரை செயல்படும். வழக்குகளை விரைவாக முடிக்க தமிழக அரசு புதிய திட்டம்
- தமிழ் செம்மொழி வளர்ச்சிக்காக சென்னையில் ரூ150 கோடியில் ஆராய்ச்சி மையம். மத்திய அரசு அமைக்கிறது.
- பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதை தடுப்போம். தமிழக அரசு திட்டவட்ட அறிவிப்பு.
- உலக கோப்பை கிரிக்கெட்டில் 100 வது சதம் அடித்தவர் என்ற சிறப்பை ஆஸ்திரேலிய தொடக்க ஆட்டக்காரர் ஹைடன் பெற்றிருக்கிறார்.

# கிறிஸ்துவின் வசனம்

*- Gem Robert*



கிறிஸ்துவின் வசனம் நிலையானது
கிருபை வரமோ அழியாதது
இயேசு எந்தன் நேசரை
இங்கு கண்டேன் வேத நூலிலே

இருதிறத்தாரை ஒன்றாக்க...
இந்த பூமிக்கு வந்தவரே
அவர் விதைத்த விதைகளெல்லாம்
அறுபது நூறு பலன் தந்தது

உலகத்திலே அதிகமா அச்சடிப்பது
உயர்வான பரிசுத்த வேதமே!
அற்புதத்தை செய்பவரே
அடையாளம் சொல்பவரே

உவமைகளாய் விளக்கினாரே
உண்மையாக பேசினாரே...
அனாதி தேவன் தீர்மானமே
அன்பின் சொருபி பிறப்புதான்

தேவ சித்தத்தில் பிறந்தாரே
தேடி சென்று நன்மை செய்தாரே
பாவ மனிதரே கேளுங்கள்
பரம சுதனை ஏற்றுக்கொள்ளுங்கள்

அவர் நுகம் இலகுவானது
அன்பின் முகம் தெரிகின்றது
பாரசுமையை இறக்கிடுவோம்
பரிசுத்தரை துதித்திடுவோம்

கவிஞர்- ராபர்ட் ஜிம்
தஞ்சை கிறிஸ்துவின் சபை

**இருபத்தாறாவது வாசகர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்**

கிறிஸ்துவின் வசனம்




ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் நடைபெற்ற வாசகர் கருத்தருங்கில் கலந்து கொண்டவர்கள்

கிறிஸ்தவனின் ஆயுதம்


**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள் — ரோ.13:14**




# வளர்ச்சிப்பாதையில் கிறிஸ்துவின் வசனம் ...




- வின் டிவியில் திங்கள் முதல் வெள்ளிவரை.
- இலங்கை வானொலியில் ஒவ்வொரு புதன் கிழமை மற்றும் மாதத்தின் கடைசி சனிக்கிழமை.
- மாத இதழ் ஒவ்வொரு மாதமும் 2500 பிரதிகள்.
- கொடைக்கானலில் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' புத்தகநிலையம்.
- வேதாகம கல்லூரி.
- நற்செய்தி கூட்டங்கள்.
- மற்றும் அநேகம்...



சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-4
# இயேசுகிறிஸ்துவின் இரண்டாம்வருகை தாமதம் ஏன்?

John S.Nathan, Gospel Minister
Mobile: 9841017621

உலகிலுள்ள 200 கோடிக்கு அதிகமான கிறிஸ்தவர்களின் மாபெரும் நம்பிக்கை இயேசுவின் உயிர்த்தெழுதலே! 1கொரி.15:17–20,22,23 வாசிக்கவும். விசுவாசிகளின் மாபெரும் நம்பிக்கை அவரைப்போலவே இவர்களும் உயிர்த்தெழுந்து அழியாத நித்திய மரணமிலா பெருவாழ்வை பெறவேண்டி அவரின் வருகையை எதிர்நோக்கியுள்ளனர். கி.மு. கி.பி சகாப்தமே அண்ணார் உயிர்த்தெழுதலினால்தான் உறுதியாக்கப்பட்டு சரித்திர சான்றானது. பெந்தெகொஸ்தே நன்நாளில் தொடங்கி தொடர்ந்து இந்நாள் வரையில் அவரின் சீடர்கள் நற்செய்தியின் தொடர்ச்சியாக அவரின் இரண்டாம் வருகையையும் தவறாமல் அறிவித்து வருகிறார்கள். ஆனால் கேட்டவர்கள் அதனை தவறாக புரிந்துகொண்டு கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த நற்செய்தியை கேட்ட முதலாம், இரண்டாம் சந்ததியார்களில் அனேகரும், தெசலோனிக்கசபையாரும் இயேசு கிறிஸ்துதான் வரப்போகிறாரே நாம் ஏன் பாடுபட்டு உழைக்கவேண்டும்? என்று கூறிக்கொண்டு உழைக்காமல் உண்டு வந்தனர். இதனைக் கேள்வியுற்ற பவுலடியார் 2தெச.3:7–12 வச.8–ல் தாங்கள் ஒருவனிடத்திலும் இல்வசமாய் சாப்பிடாமலும்... ஒருவனுக்கும் பாரமாய்இராமலும், இரவும் பகலும் பிரயாசத்தோடும், வருத்தத்தோடும் வேலை செய்தனர். வசனம் 10,12–ல் ஒருவன் வேலைசெய்யாவிட்டால் அவன் சாப்பிடவும் கூடாதென்று பவுலடியார் எச்சரித்தது இன்று நமக்கும் ஏற்றதாய் உள்ளது.

இன்று நாம் இயேசுகிறிஸ்து வருகிறார் என்று பிரசங்கித்தாலோ, எழுதினாலோ, இன்றும் இன்னும் அவரைப்பற்றி முழுமையாக அறியாதவர்களில் அனேகர், உடனே அவர் எப்போது வருவார்? எங்கே வருவார்? ஏன்வருவார்? என்று கூறி எள்ளி நகையாடுகிறார்கள். இக்கட்டான இக்கால கட்டத்தில் அவர்களின் அறியாமையை போக்கிடவேண்டியது நமது தலையாய கடமையாகும். வேதாகமத்தில் (புதியஏற்பாட்டில்) 25 வசனங்களுக்கு ஒருவசனமாக அவரின் இரண்டாம் வருகையை போதிக்கிறது. அவற்றுள் சில வாக்கியங்களை மாத்திரம் நாம் மறுபடியும் வாசித்து தெளிவுபெறுவோம். மற்றவர்களையும் தெளிவுபடுத்துவோம்

–தொடரும்

கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் - 2பேது.3:9

**சிறுவர் பகுதி**

# சகேயு

***வேத பகுதி: லூக்கா19:1–10***

*-K.Mohan, B.Komarapalayam*



பிரியமான பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் என் வாழ்த்துக்கள். இன்று நாம் சகேயு என்பவரைப் பற்றிப் பார்ப்போம்.

இவர் ஆயக்காரருக்கு தலைவனும், ஐசுவரியவானுமாய் இருந்தார் என்று மேற்கண்ட வேதபகுதியில் வாசிக்கிறோம். இந்த சகேயு இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவனோ குள்ளமான மனுஷனாக இருந்தபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைப் பார்க்கமுடியாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். அவனுக்குத்தான் எத்தனை அதிகமான வாஞ்சை பார்த்தீர்களா! இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவனுக்கோ மிகுந்த மகிழ்ச்சி. நாமோ அவரைப்பார்க்க இந்த காட்டத்திமரத்தில் ஏறினோம் அவரோ என் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லுகிறாரே என்று நினைத்து சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனான்.

அவர் சகேயு வீட்டுக்குப்போவதை கண்ட சிலர் முறுமுறுத்தார்கள். இன்று இருக்கிறார்களே அவர்களைப்போல அன்றும், ஆண்டவர் இந்தப் பாவி வீட்டுக்கு தங்கும்படி போகிறார் என்று சொல்லி முறுமுறுத்தார்கள். சகேயுவுக்கோ ஒரே சந்தோஷம். அவன் ஆண்டவரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். அவனுடைய மனந்திரும்புதலைக் கண்ட கர்த்தர் இந்த வீட்டிற்கு இன்றைக்கு இரட்சிப்பு வந்தது இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார்.

இன்று இந்த சகேயுவைப்போல ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாக நாம் மாற வேண்டுமானால் இவனைப்போல மனந்திரும்பவேண்டும். அவன் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். ஒரு ஆயக்காரன் இந்த அளவு மனமாற்றப்பட்டிருக்கிறான் என்றால் நாம் எந்த அளவுக்கு மாற்றப்படவேண்டும். மாறுங்கள் அப்பொழுது கர்த்தர் நம்முடைய வீட்டிற்கும் இரட்சிப்பைக் கட்டளையிடுவார்.

**மனப்பாட வசனம்:**

**"இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" - லூக்கா 19:10**

## வேத அறிவுப்
## போட்டி எண்.81

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில்* ***இம்மாதம் 25ம்தேதிக்குள்*** *எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.* ***பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. காணப்படுகிறதை நம்புகிறது என்னவல்ல?
2. போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்று எப்பிரமாணத்திலே எழுதியிருக்கிறது?
3. எது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது?
4. தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் எவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது?
5. அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், தானும் எப்படி நடக்கவேண்டும்?
6. ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களை என்ன செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
7. தண்ணீரில்லாத குழியிலே அடைபட்டிருக்கிற உன்னுடையவர்களை நான் உன் உடன்படிக்கையின் இரத்தத்தினாலே என்ன பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
8. நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, எதைத்தேடுங்கள்? அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்?
9. நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி; பயப்படாதே என்றீர் என்று எந்த தீர்க்கன் சொல்லுகிறான்?
10. மிகுந்த சோம்பலினால் எது பழுதாகும்; கைகளின் நெகிழ்வினாலே எது ஒழுக்காகும்?

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே
சோதனை உங்களுக்கு நேரிடவில்லை; தேவன்
உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு
மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர்
இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக,
சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான
போக்கையும் உண்டாக்குவார். 1கொரிந்தியர்10:13

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202
Editor: B.Arjunan.


R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without pre-payment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th May 2007.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**






**உங்கள் வானொலியில்**

**இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்**
**ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்**
**மேலும்**

**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**

தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**Radio & TV** -யில் வெளிவந்த தேவ செய்திகள் அடங்கிய **CD & DVD** -க்கள் தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொள்ளவும்.

*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202. S. India*

**Monthly Magazine**

To

*From*

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202*